<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 283/2023</u>

<u>LW : 4 PW : 4</u>

2026 ஆம் ஆண்டு மே மாதம் 14 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. பிரேம் ஆனந்த் | த / பெ. | திரு. கலியமூர்த்தி |
| கிராமம் | : | சேங்காலிபுரம் | தாலுக்கா | குடவாசல் |
| தொழில் | : | Security | வயது | 50 |

**<u>எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திரு. பிரேம் ஆனந்த் என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் குடவாசல் தாலுக்கா சேங்காலிபுரம் என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் Security ஆக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி செந்தில் என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். கடந்த 18.03.2023 ந் தேதி நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் Security ஆக பணியில் இருந்தபோது செல்போன் காணாமல் போனது குறித்து போலிசார் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வந்து விசாரித்து கொண்டிருந்தார்கள். மேலும் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்தார்கள். போலிசார் என்னிடமும் சாட்சி செந்தில் என்பவரிடம் சாட்சியாக இருக்கும் படி கேட்டுக்கொண்டதன் பேரில் நாங்கள் இருவரும்

சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் மதியம் 02.30 மணியளவில் கையெழுத்து போட்டேன். நான் சொல்லிய நேரத்தில் போலிசார் அங்கு வரவில்லை என்றாலும், நான் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.14 11:03:01 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. No. 283/2023</u>

<u>LW: 6 PW:5</u>

2026 ஆம் ஆண்டு மே மாதம் 14 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. தினசீலன் | த / பெ. | திரு. தியாகராஜன் |
| கிராமம் | : | கடுவங்குடி | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | ஒப்பந்த பணியாளர் (மருத்துவக்கல்லூரி மருத்துவமனை) | வயது | 28 |

<u>**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி திரு. தினசீலன் என்பவரை திருவாரூர் தாலுக்கா காவல் நிலைய பெண் காவலர் திருமதி. வெண்ணிலா WPC No. 946 அடையாளம் காட்டினார்.**</u>

<u>**முதல்விசாரணை**</u>

நான் திருவாரூர் தாலுக்கா கடுவங்குடி என்ற ஊரில் வசித்து வருகிறேன். நான் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒப்பந்த பணியாளராக பல்வேறு பட்ட வேலைகளையும் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பங்கள் என்னுடையது தான். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு நான் பணியில் இருந்தபோது அவசர சிகிச்சை பிரிவு அருகே போலிசார் ஒரு நபரை விசாரித்து கொண்டிருந்தார்கள். போலிசார் அந்த நபர் சொல்வதை எழுதிக்கொண்டார்கள். அந்த நபர் செல்போனை எடுத்து போலிசாரிடம் ஒப்படைத்தார். என்னை சாட்சியாக இருக்கும் படி போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்சொன்ன சாட்சி

கையொப்பங்களை போட்டேன். போலிசார் விசாரித்து கொண்டிருந்த நபரின் பெயர் பிரவீன் என்று தெரிந்துகொண்டேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் அ.த.சா.ஆ 3 ஆகவும், கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் கையெழுத்து போட்ட ஆவணத்தை தயார் செய்தது, காவல் நிலையத்தில் தான் என்றால் இல்லை அவசர சிகிச்சை பிரிவில் போட்டேன். எத்தனை பக்கத்தில் எழுதினார்கள் என்றால் 2 பக்கங்களில் எழுதினார்கள். எழுதி என்னிடம் காட்டிய தாளில் தான் நான் கையெழுத்து போட்டேன். அந்த செல்போன் யாருடையது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் பிரவீன் என்பவரை விசாரிக்கவில்லை என்றாலும், எவ்வித ஆவணம் தயார் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் இவ்வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட சாட்சி என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.14 11:03:09 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்